# விவேகானந்த கேந்திரம்

NARDEP
WE LIVE TO SERVE

VIVEKANANDA KENDRA
NARDEP

NARDEP

LIVING IN TUNE WITH NATURE

**இயற்கை வள அபிவிருத்தி திட்டம் (NARDEP)**

**கன்னியாகுமரி**



**உங்கள் சுகபோகங்களை விட்டொழியுங்கள் ......... பிறகு, மக்கள் வாழ்க்கை என்னும் மாகடலைக் கடக்க மனித சங்கிலியால் ஆன பாலத்தை உருவாக்குங்கள்.**

**-சுவாமி விவேகானந்தர்.**

உத்தம மனிதர்களை உருவாக்கி ஒளிமயமான தேசத்தை நிர்மாணிக்க கல்வி, யோகம், கிராம முன்னேற்றத் திட்டப் பணிகளை விவேகானந்த கேந்திரம் செய்து வருகிறது. இத்தேசிய புனர் நிர்மாணப் பணியில் இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் (NARDEP) என்ற புதிய திட்டத்தை ஜனவரி 1-ம் தேதி 1986-ம் வருடம் கிராமப்புற மக்களின் நலனுக்கெனக் கேந்திரம் அறிமுகப்படுத்தியுள்ளது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள் :**

1. மனித குலம் வாழ, இயற்கை வளங்களை பேணிக்காக்க வேண்டிய அவசியத்தையும், புறச்சூழ்நிலை உணர்வை ஏற்படுத்தவும்,
2. முறைசாரா தொழில் நுட்பங்களை கிராமங்களில் அறிமுகப் படுத்தி, மக்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தி உற்பத்தியை பெருக்கவும்,
3. ஆராய்ச்சி நிறுவனங்களின் தொழில் நுட்பங்களை மக்களிடையே பரப்பி வருகிறது.

## முன்னேற்றப் பணிகள் பின்வருமாறு :


**சக்தி கிராமம் :**

கிராமத்தில் உள்ள இயற்கை வளங்களை பரிசீலனை செய்து மக்களின் எரிசக்தித் தேவைகளை திட்டமிட்டு பூர்த்தி செய்யும் கிராமம் சக்தி கிராமம் எனப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இடையன்விளை கிராமத்தை சக்தி கிராமமாக்க இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் கருவியாக செயல்பட்டு வருகிறது. இயற்கை வளங்களான காற்று, நுண்ணுயிர், சூரியஒளி, ஆகியவையை கணக்கில் கொண்டு முறைசாரா தொழில் நுட்பங்கள் மூலம் எரிசக்திக் கலவையை உருவாக்கி மக்களின் எரிசக்தித் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. சமூகத்தின் ஒத்துழைப்புடன் இப்பணியை நிறைவேற்ற, இந்திய அரசின் முறைசாரா தொழில் நுட்பத்துறை (DNES) நிதி உதவி அளிக்கிறது.

**சாண எரிவாயு தொழில் நுட்பம் :**

இயற்கை வள அபிவிருத்தித் திட்டத்தை (NARDEP), தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறை அதிகார பூர்வமாக சாண எரிவாயு கலன்களை அமைக்க தொழில் நுட்ப (Turnkey Agency) நிறுவனமாக நியமித்துள்ளது. இதன்மூலம் கன்னியாகுமரி, திருநெல்வேலி, சிதம்பரனார் மாவட்டங்களில் சாண எரிவாயுக் கலன்களை அமைத்து கிராமப்புற



மக்களின் எரிசக்தி தேவைகளை (NARDEP) பூர்த்தி செய்து வருகிறது. இக்கலன்களை அமைக்க கொத்தனார்களுக்கு பயிற்சி முகாம்களையும் நடத்தி வருகிறது.

**மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் :**

கன்னியாகுமரி, திருநெல்வேலி, மாவட்டங்களில் மேம்படுத்தப்பட்ட அடுப்புக்களை மக்கள் பயன்படுத்த இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் வழி வகை செய்துள்ளது. இதற்கான மான்யத்தை தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை அளிக்கிறது.

**ஓலைகளை பதப்படுத்தல் :**

தென்னங்கீற்றுக்களை வீட்டின் கூரைகளுக்கு ஓலைகளாக பயன் படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. இவ்வோலைகளின் ஆயுட் காலத்தை ஒரு வருடத்திலிருந்து நான்கு வருடத்திற்கு கூட்ட, பிராந்திய ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம் ஓர் எளிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தொழில் நுட்பத்தை கன்னியாகுமரி திருநெல்வேலி, சிதம்பரனார், இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங் களில் மக்களுக்கு எடுத்துச் சொல்லி புழக்கத்தில் கொண்டு வர இயற்கை வள அபிவிருத்தித்திட்டம் (NARDEP), காபார்ட் (CAPART) நிதியுதவியைக் கொண்டு, வழிவகைகளைச் செய்துள்ளது. மேலும் கிராம இளைஞர்களை இத்தொழில் நுட்பத்தில் பயிற்றுவித்து, தன்னம்பிக்கையை ஏற்படுத்தி, சுயவேலை வாய்ப்புக்கான சூழலை ஏற்படுத்தித் தந்துள்ளது.



## குறைந்த செலவில் கழிப்பறைகள் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிராமபுறச்சூழலை மேம்படுத்த 200 கழிப்பறைகளை (குறைந்த செலவில்) மக்களின் ஈடுப்பாட்டுடனும் காபார்ட் (CAPART) நிறுவனத்தின் நிதியுதவியுடன் இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் (NARDEP) கட்டி வருகிறது.

## கைவினைப் பொருட்கள் :

மாவட்ட தொழில் மையம் (DIC) நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அளிக்கும் மான்யத்தைக் கொண்டு இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் (NARDEP) வேலையற்ற கிராமபுற பெண்களுக்கு கத்தாழை, கடற்சிப்பியை கொண்டு கைவினைப் பொருட்களை செய்ய பயிற்சிபெறச் செய்து, அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியின் மூலம் வாழ்வை அமைத்துக்கொள்ள வழி வகுக்கிறது.

## இதர திட்டப் பணிகள் :


ஆய்வில் உள்ள முறைசாரா தொழில் நுட்பங்களின் சோதனை மாதிரிகளை, மக்களுக்கு எடுத்து சொல்வதற்காக விவேகானந்தபுரத்தில் கண்காட்சியை அமைத்துள்ளது. இந்நுட்பங்களை மக்களிடையே பரப்புவதற்குத் தேவையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மாதிரிகள் :

1. சூரிய ஒளியில் இயங்கும் பம்பு
2. சூரிய ஒளியில் இயங்கும் சுடுநீர் சாதனம்
3. சக்திக் காடுகள்
4. ஸ்டர்லிங் என்ஜின்
5. காஸிபையர்
6. சொட்டு நீர்ப்பாசனம்
7. குறைந்த செலவில் வீடுகள்
8. தேனீ வளர்ப்பு

இயற்கை வள அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப் பணிகள், மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். பிரபல நாளிதழான இந்து (THE HINDU)வில் அக்டோபர் மாதம் 16-ம் தேதி, 1987-ல் வெளியிட்ட ஒரு பகுதியை தருகிறோம். சக்திக் கிராமமான இடையன்விளையில் ஏழு குழந்தைகளுக்குத் தாயாக விளங்கும் திருமதி பால்தங்கம் நிருபரின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்:-

''இத்திட்டம் பயனில்லாதது என யார் கூற முடியும்? மாடுகள் வைத்திருந்தவர்களுக்கு சாண எரிவாயு கலன்கள், சிலருக்கு சூரியஒளி அடுப்புகள், மேலும் எனக்கு மின் வசதி செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதைவிட அதிகமாக வேறு என்ன நாம் அவர்களிடம் கேட்க முடியும்''.



மக்களுக்கு திறம்பட சேவை செய்ய உங்கள் ஆலோசனைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:-

**செயலாளர்,**
**இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் (NARDEP)**
**விவேகானந்தபுரம்**
**கன்னியாகுமரி - 629 702**
**கன்னியாகுமரி மாவட்டம்.**